# தேவ சித்தம் நிறைவேறட்டும்

தேவ கிருபையினாலே இன்னுமொரு ஆண்டை மட்டுமல்ல, அநேக காரியங்களை நம்முடைய வாழ்க்கையிலே நாம் கடந்து வந்திருக்கின்றோம். ஒரு நாள் உதயமாகி, பகலாகி, இரவாகி முடிவந்தது போல, கடந்த ஆண்டும் சீக்கிரமாய் கடந்து போய்விட்டது. மனிதகளுடைய நாட்காட்டியிலே புதிய ஆண்டு தோன்றுவதற்கு முன்னதாக, அதைக் குறித்து பல திட்டங்களை நாம் வகுத்துக் கொள்கின்றோம். சிலர், சில நாட்களுக்கு முன்னதாகவோ அல்லது கிழமைகளுக்கு முன்னதாகவும், வேறு சிலர், சில மாதங்களுக்கு முன்னதாகவும், இன்னும் சிலர் சில வருடங்களுக்கு முன்னதாகவும், அடுத்த திட்டத்தை குறித்து வகுத்துக் கொள்கின்றார்கள். திட்டமிட்டு வாழ்வதில் தவறு இல்லை. ஆனால், அந்தத் திட்டத்திற்குள்ளே ஆண்டவராகிய இயேசு எங்கே இருக்கின்றார் என்பதை நாம் நிதானித்து அறிந்து கொள்ள வேண்டும். உலகம் நம்மை அறியாத நாட்களிலே, நம் நிலைமையை விசாரிக்க யாருமில்லாத நாட்களிலே, ஆண்டவர் இயேசு நம்மை தேடி வந்தார். அவரிலே நிலை கொண்டு ஆரம்பித்த வாழ்க்கை, ஆண்டுகள் கடந்து சென்றதும், நிலை தவறிப் போய்விட்டதற்கு காரணங்கள் என்ன? விசுவாசிகள் தங்கள் சொந்த பெலத்திலே திட்டங்களை போட்டு, அந்த திட்டங்களை நியாயப்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றார்கள். ஒருவேளை சிறப்பாக நிறைவேறலாம் ஆனால் சுய திட்டங்கள் விசுவாசிகளை, ஆண்டவர் இயேசுவை விட்டு, தூரம் கொண்டு சென்று விடும். அத்திட்டத்திலே, அறிந்தோ அறியாமலோ மேன்மை பாராட்டுதல் உண்டாகி விடக்கூடிய சாத்தியங்கள் உண்டு. “மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணு வோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண் டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.” என்ற பரிசுத்த வேதாகமம் அறிவுரை கூறுகின்றது. எனவே, நம்முடைய சுய திட்டங்களை ஆண்டவர் இயேசுவின் பாத்திலே வைத்துவிட்டு, தேவ சித்தத்தை நம் வாழ்விலே நிறைவேற்றுகின்றவர்களாக கடந்து செல்வோமாக.

**யாக்கோபு 4:15**

**ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.**

**ஜெபம்:** வருடங்களை நன்மையானல் முடிசூட்டுகின்ற தேவனே, இந்த ஆண்டிலே, என் சுய விருப்பத்தின்படி நான் காரியங்களை திட்டமிடாமல், உம்முடைய சித்தப்படி வாழ என்னை உணர்வுள்ளவனாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நன்மையால் முடிசூட்டும் தேவன்

**எபிரெயர் 12:1**

நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த பெரிய பண்ணையின் முதலாளியொருவன், தன் பெலனானது குறைந்து போவதை அறிந்திருந்ததால், தன்னுடைய குமாரன் பண்ணையை முழுமையாக எடுத்து நடத்தும்படிக்கு, அவனை பற்பல காரியங்களிலே பயிற்சிவித்து வந்தான். இதை உணர்ந்து கொள்ளாத அந்த குமாரனானவன், ஒரு நாள் தன் தகப்பனிடம் சென்று, தந்தையே, இந்தப் பண்ணையிலே நான் அநேக வருடங்களாக வேலை பார்த்து வருகின்றேன். என் இஷ்டப்படி எதையுமே செய்ய முடியவில்லை. இந்த ஆண்டிலே, என் நண்பர்களில் சிலர், புதிய வியாபாரங்களை ஆரம்பித்து, சிலரை வேலைக்கமர்த்தி, குளிரூட்டப்பட்ட அறையிலே இருந்து சுயாதீனமாக வேலை பார்கின்றார்கள். ஆனால், நானோ, இவ்வளவாய் வருதப்படுகின்றேன். இந்த ஆண்டிலே, நானும், ஒரு சிறு வியாபாரத்தை ஆரம்பித்து என் சுயாதீனத்தின்படி அதை நடத்திச் செல்ல எனக்கு, பண்ணையின் ஒரு பங்கை தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அதைக் கேட்ட அவனுடைய தகப்பனானவர், தன் குமாரனின் அறியாமையைக் குறித்து மனவருத்தப்பட்டான். நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட பாக்கியம் பெற்ற சகோதர சகோதரிகளே, இந்த ஆண்டிலே உங்கள் திட்டம் என்ன? நீங்கள் எதை பாக்கியம் என்று எண்ணிக் கொள்கின்றீர்கள்? உங்கள் வாழ்வின் ஆசீர்வாதத்தின் வரைவிலக்கணம் என்ன? சற்று ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருந்து உங்கள் வாழ்க்கையை சிந்தித்துப் பாருங்கள். எந்த நாளிலே நீங்கள் ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றீர்களோ, அன்றைய நாளிலிருந்து, மகிமையின் நம்பிக்கையாக ஆண்டவராகிய இயேசு உங்களில் வாசம் செய்கின்றார் என்பதை நன்றாக அறிந்து கொள்ளு ங்கள். இந்த உலகத்தின் போக்கில் வாழும் அவிசுவாசிகள் தங்கள் வழிகளை தங்களுக்கென்று ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். சமகாலத்திலே அவை செழிப்பானவைகளாக தோன்றும். ஆனால் நீங்களோ, ஆண்டுகளையும், காலங்களையும், உங்கள் எதிர்காலத்தை அறிந்த வரும், நன்மையை இன்னதென்று அறிந்தரும், விசுவாசத்தை தொடக்கின்றவரும் முடிக்கின்றவருமாகிய ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொண்டு, அவர் உங்களை நடத்திச் செல்லும்படி இடங்கொடுங்கள். காலத்திற்கு காலம் உங்கள் திட்டங்களை மாற்றிக் கொள்ளாமல், தேவன் நியமித்த ஓட்டத்திலே பொமையோடு ஓடக்கடவோம்.

**ஜெபம்**: என் வாழ்விலே நன்மை இன்னதென்று அறிந்த தேவனே, நான் உலகத்தைப் பார்த்து அந்த வழியிலே போய்விடாதபடிக்கு, நீர் எனக்கு கொடுத்தவைகளை பற்றிக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# பாக்கியமுள்ள ஜனங்கள்

இன்றைய உலகிலே, பாக்கியம் பெற்றவர்கள் அல்லது ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்ற பரிசுத்த வேதாகத்திலே கூறப்பட்ட பதங்கள் வேறு பட்ட அர்த்தமுடையதாகவும், கருத்துக்கள் மாறுபட்டதாகவும் காணப்படு கின்றது. ஒரு விசுவாசியானவன், உயர் கல்வி கற்று, தாராளமாக உழை த்து,உலக ஆஸ்திகளை பெருக்கி, தன் மனைவி பிள்ளைகளோடு வாழும் போது, அவன் பாக்கியம் பெற்றவன், ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று கூறிக் கொள்கின்றார்கள். அந்த விசுவாசியின் வாழ்க்கை யிலே கர்த்தருடைய கரம் அவன் மேல் இருந்திருக்கலாம். ஒரு வேளை அவை கர்த்தரால் உண் டாயிருந்திருக்கலாம். ஆனால், ஒருவனுக்கு உயர்ந்த கல்வி, திரண்ட ஆஸ்திமற்றும் சமுக அந்தஸ்து இருப்பதனால், அவன் நித்திய ஜீவனை அடைந்து விடக்கூடுமோ? உலகிலே வாழும் அவிசுவாசிகளுடைய வாழ் க்கையிலே அவை அதிகமதிகமாக பெருகி இருக்கின்றதை காண்கின் றோம் அல்லவா? நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான் கள் அல்லவோ? பரலோகராஜ்யம் அவர்களுடையது என்று ஆண்ட வராகிய இயேசு கூறியிருக்கின்றார். இந்த உலகிலே வாழும் விசுவாச மார்க்கத்தை சேர்ந்தவர்களில் சிலர் உலக பொருளாதாரத்தில் ஏழைகள் என்று பெயர் பெற்றிருந்தாலும், அவர்கள் விசுவாசத்திலே ஐசுவரியமு ள்ளவர்களாக இருக்கின்றார்கள் அல்லவா. "வேறு சிலர் நிந்தைகளை யும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள் கல் லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டா ர்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித் தார்கள் உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை. அவர்கள் வனாந்தரங்களிலேயும்மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடி ப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்." என்னிமித்தம் உங்களை நிந் தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர் கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள் பரலோகத்தில் உங்கள் பலன் மிகு தியாயிருக்கும் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். எனவே எந்நிலையிலுத் நீங்கள் கர்த்தரை பற்றிக் கொண்டிருங்கள்.

**சங்கீதம் 33:12**

**கர்த்தரைத்தங்களுக்குத் தெய் வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது**

**ஜெபம்**: உன்னத்திலே வாசம் பண்ணும் தேவனே, எந்நிலையிலும், நான் எப்போதும், உம்மை பற்றிக் கொண்டிருப்பதையே மேன்மையாக எண் ணிக் கொண்டிருக்கும் உள்ளத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஆவியில் எளிமையுள்ளவர்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஐசுவரியமுள்ள மனிதனொருவன், அதிகார முடைவனும், சரீர பெலனுடையவனும், நீதியின்படி வாழ்பவனும், உதார குணமுள்ளவனும், அந்த ஊரின் மக்கள் மத்தியிலே பிரபு என்ற கன த்திற்குரியவனுகமாக இருந்தான். ஆனாலும், அவன் தேவனாகிய கர்த் தர் முன்னிலையிலே வரும் போது, அவருடைய பாதத்திலே, உண்மை மனதுடன், தன்னைத் தாழ்த்தி, தனக்கிருக்கும் சுய பெலத் தினாலும், தன் நீதியின் கிரியைகளினாலும், தன் ஆத்துமாவிற்கு விடுதலை யை பெற்றுக் கொள்ள முடியாது என்று அறிக்கை செய்கின்றவ னாக இருந்தான். அவன் இந்த உலகத்தோடு அழிந்து போகும் காரியங்களிலே தன் நம்பிக்கை யை வைக்காமல், அழியாமையை பெற்றக் கொள்ள வேண்டும் என்று ஆண்டவராகி இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவனாக இருந்தான். இவனே ஆவியிலே எளிமையுள்ளவன். கருப்பொருளாவது, ஆவியிலே எளிமை என்பது, ஒருவனுடைய பொருளாதார நிலைமையை மையமாக வைத்துக் கணிக்கப்படுவதில்லை. ஒரு சாரார், பொருளாதார நிலை மையில் ஏழை, எளியவர்களாக இருந்தும், “புலி பசித்தாலும் புல்லுத் திண்ணாது” என்று மனதிலே அகங்காரமுள்ளவர்களாக இருந்து, தேவ னுடைய சமூகத்திலே தங்களை தாழ்த்த மறுகின்றவர்களாக இருக் கின்றார்கள். இன்னுமொரு சாரார், உலக ஐசுவரியம் மிகையாக இரு பப்தினால், தாங்கள் தேவனைத் தேடுவதைவிட, தங்களுக்குண் டான செல்வத்திலேயே அதிக நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஏழைகளுக்கே தேவ நம்பிக்கை வேண்டும் என்று ஏழைகளை நகைக் கின்றார்கள். இந்த இரண்டு சாராரும், ஆவியிலே எளிளையுள்ளவர்கள் அல்லவே. தன் தகப்பனுக்கிருந்து கொஞ்ச ஆடுகளை மேய்த்து வந்த தாவீது என்னும் இளைஞனை, தேவன் தாமே ராஜாவாக உயர்தினார். இந்த தாவீது, யுத்தத்திலே வல்லமையுள்ள போர்வீரன். அவன் தேவ னுடைய தீர்க்கதரிசியாக இருந்தான். அவனுடைய சொல்லிலே வல்ல மையிருந்தது. அப்படியிருந்தும், அவன் தேவனுடைய சமுகத்திற்கு செல்வும் போது, “இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.” என்று தன்னை தாழ்த்துகின்றவனாக இருந்தான். அவன் ராஜாவாக இருந்தும் அவன் ஆவியிலே எளிமையுள்ளவான இருந்தான். தேவன் தாவீதின் மேல் பிரியமுள்ளவராக இருந்தார். எனவே, சுய பெலத்தில் தங்கி வாழாமல் தேவ சமுத்திலே உங்களை தாழ்த்துங்கள்.

**மத்தேயு 5:3**

**ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.**

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கும் தேவனே, என் சுய பெலத்திலே நான் தங்கி வாழாமல், உம்மை நம்பி, நீர் காட்டிய வழியில் வாழும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்பிக்கையின் அஸ்திபாரம்

> **மத்தேயு 19:23**
> ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய் யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவன், தன் மாதாந்த ஊதியத்திலே தன் குடும்பத்தின் தேவைகள் சந்தித்து வந்தான். அவனுடைய உழைப்பானது, அவன் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை சந்தித்து, பிள்ளைகளின் கல்விக்கும் போதுமானதாக இருந்து வந்தது. அவனுடையசம்பளம், அவன் தேவைகளுக்கு மட்டுமட்டாக இருந்து வந்ததால், மேலதிகமாக எதையும் செய்வதற்கு முன்னதாக, அவன்தேவனுடையபாதத் திலே அமர்ந்து ஜெபிக்கின்றவனாக இருந்து வந்தான். தன் சபையிலுள்ள சிலரின் ஆலோசனைகளை கேட்டுக் கொண்டான். அதனால், அவன் அநாவசியமான செலவுகளை தவிர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல், வேண்டப்படாத அலுவல்களிலே சிக்கிக் கொள்ளாதபடிக்கு தன்னையும் தன் குடும்பத்தையும் காத்துக் கொண்டான். இந்த விசுவாசியானவன் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு தன்னை விலக்கிக் கொள்கின்றவனும், இயேசு கிறிஸ்துவை தன் நம்பிக்கையின் அஸ்திபாரமாகவும் கொண்டிலுந்தான். காலப்போக்கிலே, அவன் பொருளாதாரம் விருத்தியடைந்து, வாழ்கையிலே வசதி ஏற்பட்ட போது, அவன் கைகளிலே மேலதிகமாக பணம் இருந்தது. அதனால், அவன் தேவைகளுக்கு மேலகதிகமாக எதையும் வாங்கிக் கொள்ளு வதற்கு முன் ஜெபிப்பதை நிறுத்தி விட்டான். தான் செய்யப்போவதை தடுத்து நிறுத்தும்படிக்கு ஆலோசனை கூறும் விசுவாசிகளோடுள்ள நெருங்கிய உறவை தணித்து விட்டான். தேவனை தன்னை ஆசீர்வதிக்கின்றார் என்ற எண்ணத்துடன், தன் இஷ்டப்படி செலவு செய்ய ஆரம்பித்தான். தன்னைப் போல வருமானமுள்ள உலகத்தார் எப்படி வாழ்கின்றார்களோ, அப்படியே தன் வாழக்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். படிப்ப படியாக, ஆண்டவராகிய இயேசுவில் தங்கி வாழாமல், தன் சுயத்திலே நம்பிக்கையுள்ளவனான். ஆவியிலே எளிமைள்ளவனாக ஆண்டவர் இயேசுவிலே தங்கி வாழ்ந்த அவன், இப்போது, தன்நம்பிக்கையுள்ளவனாக மாறுவதற்கு, அவன் வாழ்விலே ஏற்பட்ட அடிப்படையான மாற்றம் என்ன? அவன் வாழ்விலே ஏற்பட்ட வசதி. அதனால்தான், "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே நம் வாழ்விலே வசதி பெருகும் போது, நாம் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**ஜெபம்**: பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கும் தேவனே, நான் எப்போதும் ஆவியிலே எளிமையுள்ளவனாக உம்மையே என் நம்பிக்கையாக கொண்டிருக்க என்னை கரம் பிடித்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுக்கேற்ற இருதயம்

மனத்தாழ்மையள்ள இருதயம், கீழ்படிகின்ற இருதயம், மனம் திரும்பும் இருதயம் ஆண்டவர் இயேசு இல்லாமல் வாழ்வு இல்லை என்கின்ற ஆவியிலே எளிமையுள்ள இருதயம். ஒரு மனிதனுக்கு எப்போது அவசியம். அவன் ஆண்டவரை இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் எடுக்கும் வரைக்குமா? இல்லை, இந்த உலகிலே ஒரு விசுவாசியாவன் உயிருள்ளவரைக்கும் அவன் ஆவியிலே எளிமையுள்ளவனான இருக்க வேண்டும். நான் தேவனை அறிந்து விட்டேன். அநீதி என்னிடத்தில் இல்லை. மாதந்தோறும் உபவாசிக்கிறேன், தவறாமல் தசம பாகம் காணிக்கைகளை செலுத்தி வருகிறேன். ஆலயத்திற்கு தவறாமல் சென்று ஜெபிக்கிறேன். எனக்கு வேதம் தெரியம் என்று வாழ்பவர்கள், தங்கள் இருதயத்தை கடினப்படுத்திக் கொள்கின்றார்கள். வேதத்திலே காணும் முன்னோடியான பாத்திரங்களின் வாழ்க்கை ஆராய்ந்து பாருங்கள். அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும், நிகழ்விலும் அவர்கள் தேவனையே நம்பியிருந்தார்கள். தாவீது ராஜா, உயர்விலும், தாழ்விலும், தேவனுடைய பாதத்திலே அமர்ந்திருப்பதைக் வழக்கப்படுத்திக் கொண்டார். அதனால், அவர் பாவம் செய்த போதும், தன் குற்றங்களை நியாயப்படுத்தாமலும், தன் பாவத்தை வெளிப்படுத்த வந்த தேவ மனுஷனை தண்டித்து கொலை செய்யாமலும், தேவனுடைய பாதத்திலே விழுந்தார். இன்றைய நாட்களிலே, சில குழுவினர், இன்ன ஆண்டிலே, நான் என் வாழ்வை கர்த்தருக்கு கொடுத்தேன். அந்த நாளிலே என் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால பாவங்கள் மன்னிக்க ப்பட்டு விட்டன எனவே, நான் மனந்திரும்பத் தேவையில்லை என்ற சாந்தமான குரலிலே கூறிக்கொண்டு, துணிகரமாக பாவத்திலே வாழ்ந்து கொண்டு, தங்கள் இருயத்தை கடினப்படுதிக் கொள்கின்றார்கள். தேவன் கொடுத்த சுத்த மனசாட்சியை தாங்களே சூடுண்டாக்கி, உணர்வற்றுப் போகப் பண்ணுகின்றார்கள். நீங்களோ, அவ்வண்ணமாக நடந்து கொள்ளாமல், “நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.” என்ற வேத வார்த்தையின்படி, நாம் தேவனுக்கு முன்பாக சமுகத்திலே எப்போதும் ஆவியிலே எளிமையுள்வர்காகவே இருப்போமாக.

**1 யோவான் 1:10**

நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்,

**ஜெபம்:** இனிபாவம் செய்யாதே என்று பாவிகளின் பாவங்களை மன்னித்த தேவனே, நான் எப்போதும் உமக்கு முன்பாக உண்மையுள்ளவனாக இருக்கும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# துயரப்படுகின்றவர்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்த வந்த இரண்டு மனிதர்கள் அநேக ஆண்டுகளாக நண்பர்களாக இருந்து வந்தார்கள். ஒரு நாள், நடந்த ஒரு சம்பவத்திலே அவர்களுக்கிடையிலே மனக் கசப்பு ஏற்பட்டு விட்டது. ஒருவன் மற்ற வனுக்கெதிராக குற்றம் செய்துவிட்டான். குற்றம் இழைக்கப்பட்டவன், குற்றம் செய்தவனை நோக்கி: சிநேகிதனே, எனக்கெதிராக இப்படியான காரியத்தை செய்வதற்கு உனக்கு எப்படி மனம் வந்தது என்று கேட் டான். குற்றம் செய்தவன் மறுமொ ழியாக: தான் செய்தது குற்றம் இல்லை என்று தன் செயலை நியா ப்படுத்தினான். இந்த தகராறினா லே, பிரிவினை ஏற்படக்கூடாது என்று எண்ணி, குற்றம் இழைக்க ப்பட்டவன், அதைக் குறித்து அதி கம் அலடிக் கொள்ளலாம், காலம் வரும் போது, அதை அவன் உண ர்ந்து கொள்ளுவான் என்று அப்படியே விட்டுவிட்டான். சில ஆண்டுகள் சென்ற பின்னர், குற்றம் செய்தவன், ஒரு சந்தர்பத்திலே, தன் தவறான செயலை உணர ஆரம்பித்தான். எனக்கு அநேக நன்மைகள் செய்த சிநேகிதனுக்கு இப்படியான துரோகத்தை செய்து விட்டேனே என்று துயரப்பட்டான். மனதிலே சொல்ல முடியாத துக்கம் ஏற்பட்டது. மறுநாள் காலை எழுந்ததும், தாமதிக்காமல், தன் சிநேகிதனுடைய வீட்டிற்கு சென்று, அவனை கட்டியணைத்து, அழுத வண்ணமாக, தன்னை மன் னிக்கும்படி வேண்டிக் கொண்டான். அன்றைய நாளிலே, குற்றம் செய் தவன் மனதிலே இருந்து பெரிதான பாரம் இறங்கியதை உணர்ந்து கொண்டான். அதை குறித்து அவன் மனதிலே ஆறுதல் உண்டாயிற்று. இவ்வண்ணமாகவே, தங்கள் தப்பிதங்களைக் குறித்து, மனம் வருந்தி துயரப்பட்டு, ஆண்டவர் இயேசுவை நோக்கி பார்க்கின்றவர்கள், ஆறு தல் அடைவார்கள். இந்த நிலையை ஒரு மனிதன் அடைவதற்கு அவன் ஆவியிலே எளிமையுள்ளவனாக இருக்க வேண்டும். அதாவது, தன் ஆத்தும விடுதலைக்கும், ஆவிக்குரிய வாழ்விற்கும், தன்நம்பிக்கை ஒன் றுக்கும் உதாவாது என்றும், ஆண்டவர் இயேசு இல்லாமல் வாழ முடியாது என்றும் உணர்ந்த அறிக்கை செய்கின்றவனே, தன் பாவங் களை உணர்ந்து, அதற்காக மனம்திரும்புதலுக்கேற்ற துக்க அடைகி ன்றான். சிலர் கிறிஸ்துவின் நிமித்தம் அநியாயத்தை சகித்து துயரப்படு கின்றார்கள், இன்னும் சிலர் தங்கள் பாவ நிலைமையை உணர்ந்து, மனம்திரும்பி துயரப்படுகின்றார்கள். இவர்கள் தேவனானே உண்டாகும் இளைப்பாறுதலையும், ஆறுதலையும் பெற்றுக் கொள்வார்கள்.

**மத்தேயு 5:4**

**துயரப்படுகிறவர்கள் பாக்கிய வான்கள்; அவர்கள் ஆறுதல டைவார்கள்.**

**ஜெபம்:** ஆறுதலின் தேவனாகிய கர்த்தாவே, என் குறைகளை நான் நியா யப்படுத்தாமல், அவைகளை உணர்ந்து அறிக்கை செய்து விட்டுவிடும் உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல்

அநேக உபத்திரவங்கள், பாடுகள் மத்தியிலும், கிறிஸ்து இயேசுவின் நற்செய்தியை அறிவித்து வந்த தேவ ஊழியராகிய பவுல், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன் என்று கூறினார். எப்படியென்றால், அவர்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, அவர்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டார்கள். புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன. அந்த வேளையிலே கொரிந்து பட்டணதிலிருந்து, தீத்து என்னும் ஊழியர் வழியாக பவுலும் அவரோடிந்தவர்களும் தங்கள் பிரயாசத்தின் பலனை கேள்விப்பட்ட போது, ஆறுதல் அடைந்தார்கள். அந்தப் பலன் என்ன? அப்போஸ்தலராகிய பவுல், நிரூபத்தினூடாக, கொரிந்து பட்டணத்திலிருந்தவர்கள் மத்தியிலே இருந்த குறைகளை சுட்டிக் காட்டி, அவர்களை கடிந்து கொண்டார். அவர்கள் அழிந்து போகும்படியாக அல்ல, அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்ற அன்பினாலே அவர்கள் குற்றங்களை தெளிவாக கூறினார். அதனாலே, கொரிந்து சபையிலே இருந்தவர்களின் மனதிலே துக்கம் உண்டாயிற்று. அந்த துக்கம் மனந்திரும்புதலுக்கு ஏதுவாக துக்கமாக இருந்தது. அதைக் குறித்து பவுல் அவர்களுக்கு கூறியதாவது: "ஆதலால் நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது மனஸ்தாபப்படுகிறதில்லை. இப்பொழுது சந்தோஷப்படுகிறேன் நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன் நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது." எனவே, பரலோகத்திலே உண்டாகும் நித்திய இளைபாறுதல் மட்டுமல்ல, இந்த உலகத்திலேயும், நம்முடைய உபத்திரவங்கள் மத்தியிலே, பிரயாசத்தின் பலன்களை காணும் போது, பிரயாசப்பட்டவர்களும், கண்டிததை நல்மனதோடு ஏற்றுக் கொண்டவர்களும் தேவனாலே உண்டாகும் ஆறுதலை அடைகின்றார்கள்.

**2 கொரிந்தியர் 7:6**

**ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார்.**

**ஜெபம்**: சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் தரும் தேவனே, தன்னைத் தாழ்த்தி உம்மிடத்தில் சேருகின்ற யாவருக்கும் உம்முடைய வார்த்தை வழியாக நீர் கொடுக்கும் ஆறுதலுக்காக நன்றி செலத்துகின்றேன். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வியாழன் | தை 9 📖 மாலை வாசகம் – யோவேல் 2:12

# எதற்காக புலம்புகின்றீர்கள்?

மனித குலத்தின் மீட்பராகிய இயேசுவை, சிலுவையில் அறையும்படிக்கு, கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு போர்ச்சேவகர் இயேசுவைக் கொண்டுபோகிறபோது, நாட்டிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, சிலுவையை அவர் பின்னே சுமந்துகொண்டுவரும்படி அதை அவன்மேல் வைத்தார்கள். திரள்கூட்டமான ஜனங்களும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பி: "எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள்வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்களென்றும் சொல்லத்தொடங்குவார்கள். பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்" என்றார். ஆம் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசுதாமே, மனித குலத்தின் பாவங்களுக்காக தன்னையே தான் பலியாக ஒப்புக் கொடுத்தார். நம்மேல் வரவிருந்த ஆக்கினையை தம்மேல் ஏற்றுக் கொண்டார். மனிதகுலமானது, அவருக்காக புலம்பி, அழுது, துயரப்படாமல், அவரை சிலுவையில் அறைந்த அவர்களுடையதும், அவர்கள் சந்ததியினர்மேல் இனி வரவிருக்கும் ஆக்கினை நீங்கும்படியாகவும், புலம்பி அழ வேண்டும். மரண வீடுகளிலே வந்து புலம்பி அழும்படி, கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள்போல கருத்தற்ற விதமாக அல்ல, அவரவர் தங்கள் தங்கள் பரிதாப நிலைமையை உணர்ந்தவர்களாக, தங்கள் பாவங்களுக்காக துயரப்பட வேண்டும். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை காண்கின்ற தேவன், அதைப் புறக்கணியாமல், தம்முடைய இரக்கத்தை அவர்கள்மேல் ஊற்றுகின்றவராக இருக்கின்றார். நம்முடைய வாழ்க்கையிலும், தேவன் பாவங்களை மன்னிப்பார், தேவ கிருபை என்றுமுள்ளது என்று கூறி, வாழ்வில் இருக்கும் மீறுதல்களை பாராமுகமாக விட்டு விடாமல், நாம் நமக்காகவும், நம் சந்ததிக்காகவும், உணர்வுள்ள இருயத்தோடும், கருத்தோடும் தேவனை நோக்கி வேண்டுதல் செய்கின்றவர்களாக இருக்க வேண்டும்.

**சங்கீதம் 51:17**

**தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.**

**ஜெபம்**: காருண்யமான தேவனாகிய கர்த்தாவே, நான் உம்முடைய கிருபையை வீணாக்கி, கூலிக்காக மாரடிக்கின்றவனைப் போல வாழாதபடிக்கு, நன்றி உணர்வுள்ள இருதயத்தோடு, வாழ வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எச்சரிப்பின் தொனி!

காலத்திற்கு காலம், தேவனாகிய கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்கள், தேவனுடைய வார்த்தையை மீறி, பாவம் செய்து வந்தார்கள். அவர்களுடைய மீறுதல்களைக் குறித்து எச்சரிப்பின் வார்த்தைகள் அறிவிக்கப்பட்ட போது, அவர்கள் அதைக் கேளாமல், அசட்டை செய்து, தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக் கொண்டு, தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகளை கூறுகின்றவர்களை, அடித்து, துன்புறுத்தி, பலரை கொலை செய்தார்கள். அதனால், அவர்கள் அந்நிய ஜாதிகளால் சிறைப்பிடி க்கப்பட்டு போனார்கள். சிறையிருப்பின் துன்பங்களாலும், ஆளோட்டிகளாலும் நெருக்கப்படுகின்ற வேளையிலே, தங்கள் அவல நிலையையும், தங்கள் முன்னோர்கள் செய்த பாவங்களை நினைத்து, மனம்வருந்தி, அழுதார்கள். தங்கள் கொடூரமான இருதயத்தை நினைத்து புலம்பினார்கள். அந்த வேளையிலே, அவர்கள் வாழ்க்கையிலே பெரிதான விடுதலை உண்டாயிற்று. கிருபையின் காலத்திலே வாழும் தேவ பிள்ளைகளே, தேவ கிருபை என்றுமுள்ளது என்று கூறிக் கொண்டு, உணர்வற்ற வாழ்க்கை வாழாதாடிக்கு எச்சரிக்கையுள்ள வர்களாக இருங்கள். நம்முடைய வாழ்க்கையின் கிரியைகளினாலே பிதாவாகிய தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். “கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.” *(2 பேதுரு 2:20-22)* என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே, கர்த்தரை அறிந்த பின்பு, இந்த உலகத்தின் சுகபோகங்களுக்காக மறுபடியும் அடிமைப்படாமல், கர்த்தரிடத்திலே சேருங்கள்.

**யோவேல் 2:12**

**ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**ஜெபம்**: பரிசுத்தத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, என்னால் ஜெயங்கொள்ள முடியாதவைகளை ஜெயம் கொள்ளும்படி நீர் என்மேல் பொழிகின்ற கிருபையை வீணடிக்காமல் வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| சனி \| தை 11 | 📖 மாலை வாசகம் – 2 தீமோ 2:12 |
|---|---|

# சாந்த குணமுள்ளவர்கள் யார்?

ஒரு ஊரிலே அமைதலான வாழ்க்கை வாழ்ந்து வந்த விசுவாசியொருவனுக்கு, அவனுடைய அயலவன், அந்த விசுவாகியானவனின் குடும்பத்திற்கு நன்மைக்கு தீமை செய்துவிட்டான். அந்த தீங்கை ஊரிலுள்ள பலர் அறிந்திருந்தார்கள். அந்த விசுவாசியானவனோ, அந்த வேளையிலும் அமைதலுள்ளவனாக தன் உணர்வுகளை கட்டுப்படுத்திக் கொண்டு, முன்பு இருந்தது போலவே அமைதலுடன் தன் வாழ்க்கையை வாழ்ந்து வந்தான். வழமையாக மற்றவர்களோடு எப்படி பேசிக் கொள்வானோ, அதே போலவே, யாவருடனும் நடந்து கொண்டான். அவனுடைய வாழ்க்கையை கண்ட ஊராரும், சக விசுவாசிகளும், அவன் சாந்தகுணமுள்ள மனுஷன் என்று மெச்சிக்கொண்டார்கள். பல ஆண்டுகளுக்கு பின்னர், அதே அய லவன், ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலே, இந்த விசுவா சியானவனுடைய கையிலே அகப்பட்டுக் கொண்டான். அந்த சந்தர்ப்ப த்திற்காக பொறுமையாக இருந்த வந்த விசுவாசியானவன், தன் குடும்ப த்திற்கு அவன் செய்த பெருந்தீங்குக்கு நிகராகவும், அதற்கு மேலாகவும் அவனுக்கு சரிக்கட்டினான். பிரியமான சகோதர சகோதரிகளே, மனித னிலே மறைந்திருக்கும் மாம்ச சிந்தையானது சிறந்த நடிகன் அல்லது நடிகையாக இருக்கக் கூடியது என்பதை தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். ஒருவன் தாழ்மையாக நடந்து கொண்டு, மென்னையான தொனியிலே பேசுவதினால்,அவன் சாந்தகுணமுள்ளவன் என்று கூற முடியாது. பரிசுத்த வேதாகமம் கூறும் சாந்த குணமுள்ளவன் யார்? அவன் தன் சுயபெலத்தில் தங்கி வாழாமல், ஆண்டவராகிய இயேசுவிலே இணைந்திருப்பதால், அவன் ஆவியிலே எளிமையுள்ளவனாக இருப்பான். அவன் தேவ நம்பிக்கையுள்ளவனாக ஆவியிலே எளிமையுள்ளவளாக இருப்பதினால், தன் குறை, குற்றங்களை, மீறுதல்களை குறித்து, துயரப்பட்டு, மனந்திரும்புகின்றவனாக இருப்பான். அப்படியாக வாழ்பவனின் வாழ்விலே, இக்கட்டும் நெருக்கமும் சூழ்ந்து கொண்டாலும் பிதாவாகிய தேவனின் சித்தம் தன் வாழ்விலே நிறைவேறும்படி, தேவ வார்த்தைக்கு இடம் கொடுப்பான். நன்மைக்கு கைமாறாக மனிதர்கள் அவனுக்கு தீங்கு செய்யும் போது,அவர்களுக்கு பதிலடி கொடுக்க சுய பெலமும், சந்தர்ப்பமும் வாய்தாலும், அவன் தேவனுக்கு பயந்து அவருக்காக காத்திருக்கின்றவனாக இருப்பான். இது கிறிஸ்துவையுடையவர்களுடைய இயற்கை சுபாவமாக மாற வேண்டும்.

**மத்தேயு 5:5**

**சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.**

**ஜெபம்:** உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் சாயலிலே வளரும்படி என்னை வேறு பிரித்த தேவனே, நான் உம்முடைய வார்த்தை என்னிலே நிறைவேறும்படி மாம்சத்திற்கு எதிர்த்து நிற்கும் பெலனை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சாந்தகுணமுள்ள ராஜாதி ராஜா

மனிதகுலத்தின் மெசியா “இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக் கொண்டு” எருசமேலுக்கு வருகை தந்தார். இன்றைய உலகிலே சில மனிதர்கள் தலைவர்களாகும்படிக்கு தங்களை தாழ்மையுள்ளவர்கள் என்று காண்பித்து, பாமர குடிமக்களோடு, சில மணிநேரத்தை, அவர்கள் வேலை செய்யும் இடத்திலோ, அவர்கள் வீட்டிலோ செலவழித்து விட்டு, அதை விளம்பரப்படுத்துகின்றார்கள். ஆண்ட வராகிய இயேசுதாமே, கழுதையில் ஏறி வந்ததால் அவர் தாழ்மையானவராக இருந்தார் என்பது பொரு ளல்ல. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிரு ப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலு வையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த் தினார். (பிலி 2:6-8). அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான். அப்பொழுது, இயேசு அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு பட்டயத்தை எடுக்கிற யாவ ரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள். நான் இப்பொழுது என் பிதா வை வேண்டிக் கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிக மான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்.” (மத்தேயு 26:51-54). சர்வ வல்லமையுள்ள ஆண்டவராகிய இயேசு, என் சித்தப்படியல்ல, உம்முடைய சித்தப்படி எனக்கு ஆகட்டும் என்று, பிதாவின் சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்து, மரிக்கும் தறுவாயிலும், இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் இவர்களை மன்னியும் என்று தன்னை துன்புறுத்தும் கொலை பாதகர்களுக்காகவும் வேண்டிக் கொண்டார். பிரியமானவர்களே, சாந்தகுணம் இன்னது என்பதை நம்மடைய ஆண்டவராகிய இயேசுவினிடத்திலே கற்றுக் கொள்ளுங்கள். அந்த தெய்வீக சுபாவத்திலே மனத்தாழ்மையும், கீழ்ப்படிவும் இன்றியமையாதது. சுய பெலத்திற்கும், சுயத்தின் ஆளுகைக்கும் அங்கே இடமில்லை. தேவ சித்தம் நிறைவேறுவதே அதின் கனியாக வெளிப்படும்.

**மத்தேயு 11:29**

**நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்;**

**ஜெபம்**: பரலோக தந்தையே, என் ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும்படி, இயேசு கிறிஸ்துவின் நுகத்தை என் மேல் ஏற்றுக்கொண்டு, அவரிடத்தில் கற்றுக்கொள்ளும்படி, சத்திய ஆவியினாலே என்னை வழி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மந்தையை சிதறடிக்காதிருங்கள்

மென்மையான தொனியுடன், அமைதலாக பேசுவது நல்லது. ஆனால், அந்த பேச்சின் பின்னனி என்ன என்பது வெளிப்படும் போது, அந்த பேச்சாளரின் மனதிலே சாந்த குணமா அல்லது வஞ்சனையா இருந்தது என்பது வெளிப்படும். ஆண்டவர் இயேசுவோடு மந்தையை சேரக் காதவன், அவைகளை சிதறடிக்கின்றான். அதாவது, வேற்றுமைகள், சவால்கள், பிரச்சனைகள் ஏற்படும் போது, மந்தைகளை ஆவிக்குரிய யுத் தத்திற்கு பயிற்சிவிக்கின்றவன், அவன் தேவனுக்குரியவனாக இருப்பான். ஆனால், எந்த விதத்திலும் பிரிவினை களுக்கு ஏதாவது இருக்கின்றவன், மந்தைகளை சிதடிக்கின்றவனாக இரு க்கின்றான். அவன் சாந்தமாக பேசி னாலும், அவனிடத்திலே சாந்த குணம் இல்லை. ஆதியிலே, பிசாசான வன், தன் இனிமையானபேச்சினால், ஏவாள் அடையக்கூடிய மேன்மை யான ஸ்தானம் உண்டு என்று அவளுக்கு போதித்தான். அந்தப் பேச்சு அவளுக்கு யாதார்த்தமுள்ளதாக இருந்தது. அதன் முடிவு என்ன, தேவ னுக்கும், மனிதகுலத்திற்கும் நிரந்தர பகையும், பிரிவினையும் உண்டா யிற்று. ஆண்டவராகிய இயேசுதாமே, மனத்தாழ்மையும், கீழ்ப்படிவும், சாந்தமுமுள்ளவராக வந்தார். மிகப் பயரங்கரமான பாவிகளுக்கும், ஏழை எளியவர்களுக்கு, மனதுருக்கங்காட்டி, அவர்களோடு பந்தியமர்ந்தார். சாந்தம் என்றால் என்ன என்று வாழ்ந்து காட்டிய இயேசு தாமே, பாஸ்கா பண்டிகை நாடகள் சமீபமாக இருந்த போது, எருசலேம் தேவா யலத்திற்கு சென்றார். தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களா கிய இவைகளைவிற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதை யும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டுபண்ணி, அவர்கள் யாவ ரையும் ஆடு மாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப் போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிரு ந்து எடுத்துக் கொண்டுபோங்கள் என் பிதாவின் வீட்டை வியாபார வீடா க்காதிருங்கள் என்றார்." அந்த வேளையிலே, ஏழை பணக்காரன், உயர் ந்தன், தாழ்ந்தவன் என்று எந்த முகத்தாட்சண்யமும் அவர் காண்பிக்க வில்லை. பிரியமானவர்களே, நீதியை அநீதியென்றும், முறைகேடுகளை ஒழுக்கம் என்றும் ஆதரிப்பது வேதம் கூறும் சாந்த குணத்தின் இயல்பு அல்ல. இப்படிப்பட்ட காரியங்களை நடப்பிக்கின்றவர்கள், மந்தைகளை இயேசுவிடம் இருந்து சிதறிப்போக பயிற்சிவிக்கின்றார்கள். எனவே, நீங்கள் எப்போதும் இயேசுவோடு சேர்க்கின்றவர்களாக இருங்கள்.

**மத்தேயு 12:30**

**என்னோடே இராதவன் என க்கு விரோதியாயிருக்கி றான்; என்னோடே சேர்க் காதவன் சிதறடிக்கிறான்.**

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, சாந்த குணமுள்ளவராகிய உமது சிட்சையையும், கடிந்து கொள்ளுதலையும் கண்டு நான் உம்மைவிட்டு ஓடிப் போகாமல் இருக்க, பிரகாரமுள்ள மனக்கண்களை தந்து என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சாந்தகுணத்தை காண்பியுங்கள்

மோசேயானவன், தேவ கற்பனைகளை பெற்றுக் கொள்ளும்படி, சீனாய் மலையில் ஏறிச் சென்ற போது, ஜனங்களோ சீக்கிரமாக தேவனுடைய வழியைவிட்டு விலகி, தங்களுக்கென்று விக்கிரகங்களை ஏற்படுத்தி, அதைப் தங்கள் தெய்வம் என்று பணிந்து கொண்டு, புசிக்கவும், குடிக் கவும், அலங்கோலங்களை நடப்பித்து தங்களைக் கெடுத்துக் கொண் டார்கள். அப்பொழுது தேவகோபம் பற்றியெரிந்தது. அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கிவிண்ணப்பம் செய் து, ஜனங்களுக்காக பரிந்து பேசி னான். அவர்களை நிர்மூலமாக் கா மல், பரிதாபப்படும்படி தேவனை வேண்டிக் கொண்டான். அப்பொ ழுது கர்த்தர் தமது ஜனங்க ளுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யா தபடிக்குப் பரிதாபங்கொண்டார்.

**எண்ணாகமம் 12:3**

**மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்.**

சாந்த குணமுள்ள மோசேயானவன், மலையிலிருந்து இறங்கி, பாளயத்துக்குச் சமீபித்து, அந்தக் கன்றுக்குட்டியையும் ஜனங்க ளின் நடனத்தையும் கண்டபோது, மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையிலே இருந்த பலகைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத் துப்போட்டு. அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் சுட்டெரித்து, அதைப் பொடியாக அரைத்து, தண்ணீரின்மேல் தூவி, அதை இஸ்ரவேல் புத்திரர் குடிக்கும்படி செய்தான். ஜனங்களின் தலைவர்களை மிகவும் கண்டித்து பேசினான். அவன் பாளயத்தின் வாசலில் நின்று: கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? அவ ர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். அப்பொழுது லேவியின் புத்திரர் எல்லாரும் அவனிடத்தில் கூடிவந்தார்கள். அந்நாளிலே ஜனங்க ளில் ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள். பிரியமானவர்களே, சாந்த குணம் என்றால் என்னவென்று கடந்த சில நாட்களாக தியானித்து வருகின்றோம். குற்றங்களை கண்டித்து, ஒழுக்கநெறிகளை சபையிலே பேணுவது அவசியமானது. குற்றம் செய்தவர்கள் அதை உணர்ந்து தேவ சமுகத்திலே தங்களை ஒப்புக் கொடுத்து சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். அப்பொழுது, ஆவியிலே எளிமையுள்ளவர்கள், இயேசுவில் தங்கி வாழ்வதால், தங்கள் குறைகளுக்காக துயரப்பட்டு, மனந்திம்புவார்கள். ஒருவேளை அநீதியிளைக்கப்பட்டிருந்தால், சாந்த குணமள்ளவர்கள் தேவனுடைய சித்தம் நிறைவேறும்படி தங்களை ஒப்புக் கொடுப்பார்கள். எனவே, சாந்தகுணமுள்ளவர்களே, தேவநீதி நிறைவேற காத்திருங்கள். சாந்த குணமுள்ளவர்களுக்காக, பெலீனமுள்ளவர்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம் செய்யுங்கள்.

**ஜெபம்:** பிதாவாகிய தேவனே, நான் எப்போதும் சாந்த குணமுடையதாக கனியை மற்றவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுகின்றவனாக மாத்திரம் இருக் காமல், மற்றவர்களுக்கு காண்பிக்கின்றவனாகவும் இருக்க கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பூமியை சுதந்தரித்துக் கொள்வோம்

"இராஜாதி ராஜனாம் இயேசு ராஜன், பூமியில் ஆட்சிசெய்வார்" என்ற அழகான பாடலின் வரியை நாம் அறிந்திருக்கின்றோம். (வெளிப்படுத்தல் 17:14 19:16). அவருடைய ஆட்சிக்கு இப்போது தங்களை ஒப்புக் கொடுத்து, அவருக்குள் வாழ்பவர்கள் அவரோடே கூட இந்தப் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள். ராஜாதி ராஜனும், கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசுவின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் யார்? அவர்கள் ஆவியிலே எளிமையுள்ளவர்கள், தங்கள் குற்றங்களை நியாயப்படுத்தாமல், அவைகளை ஏற்றுக் கொண்டு, அவைகளுக்காக மனம் வருந்துகின்றவர்கள். தங்களிடம் இருந்த சுயபெலன், சுயநம்பிக்கை, சுய கௌரவம், அந்தஸ்துக்களாகிய அடிமைத்தனங்கள் யாவையும் துறந்து, தங்களை அழைத்தவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்படிக்கு, தங்களை முழுமனதோடு அடிமைகளாக அவருக்கு ஒப்புக் கொடுத்தவர்கள். (ரோமர் 6:17-18). இவர்கள் சாந்தகுணமுள்ளவர்கள். இவர்கள் கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகர்கள். பேச்சிலே மாத்திரமல்ல, தங்கள் செய்கைகளிலே அமைதலுள்ள ஆவியை அலங்காரமாக கொண்டவர்கள். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். (யோவான் 16:33). அவர் இந்த உலகத்தை எப்படி ஜெயங்கொண்டார்? அவர் மரணத்தையும் பாதாளத்தையும் எப்படி வெற்றி கொண்டார்? மாம்ச சிந்தையினாலோ? இல்லை. பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தன் வாழ்விலே செய்ய ஒப்புக் கொடுத்ததினாலே, அவர் ஜெயங் கொண்டார். "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்." (2 கொரி 10:4). நாம் அவரோடே கூட, பாடுகளை சகித்து, அவர் வழியாக அவைகளை ஜெயங் கொள்ளுவோமாக இருந்தால், அவர் ராஜாதி ராஜாவாக மறுபடியும் வரும்போது, அவரோடு கூட பூமியை சுதந்தரித்துக் கொள்வோம். "நாம் அவரோடேகூடமரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" ( 2 தீமோ 2:11-12)

**சங்கீதம் 37:11**

**சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்ற உண்மையை உணர்ந்தவனாக, முற்றாக என்னை ஒப்புக் கொடுத்து வாழ என்னை வழிடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# "நான் இதை செய்து முடிப்பேன்"

ஆண்டவராகிய இயேசுவின் பிரதான அப்போஸ்தலனென்று அழைக்கப்பட்ட பேதுரு என்பவன், தன் மனதிலுள்ள காரியங்களை பேசுவதற்கு முந்திக் கொள்பவனாக இருந்து வந்தான். சில இடங்களிலே ஆண்டவர் இயேசுவைகூடகடிந்துகொண்டான். ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசு தம்முடைய பாடுகளையும் மரணத்தையும் குறித்து முன்னறிவித்தபோது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக்கடிந்துகொள்ளத் தொடங்கினான். ஆண்டவர் இயேசுவோ, திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே,நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் என்று அவனைக் கடிந்து கொண்டார். இன்னுமாய், ஆண்டவர் இயேசு சீஷர்களின் கால்களை கழுவினபோது, தன் கால்களை கழுவக்கூடாது என்று தடுத்து நிறுத்தினான். மேலும், ஆண்டவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களை நோக்கி: இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்று கூறியபோது, அதற்குப் பேதுரு: உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் இடறலடையேன் என்றான். இப்படியாக தன்னை குறித்தும், தன் பலத்தைக்குறித்தும் பேதுரு எண்ணங் கொண்டிருந்தான். இவன் ஆண்டவரை நேசிக்கின்றவனும்,அவராலேதெரிந்து கொள்ளப்பட்டவனுமாயிருந்தான். ஆண்டவ ரோடு சேர்ந்து ஊழியங்களை செய்து வந்தான். ஆனால், சந்தர்ப்ப சூழ்நிலையிலே அவன் தன் ஆண்டவரை மறுதலித்த போது, தன் ஆவிக்குரிய நிலைமையையும், தன் பெலத்தால் ஒன்றும் ஆகாது என்பதை உணர்ந்து ஆவியிலே எளிமையுள்ளவனான். தன் பெலவீனத்தையும், குற்றத்தையும் உணர்ந்து, துயரப்பட்டு, மனங்கசந்து அழுதான். ஆண்டவர் உயிர்தெழுந்தபின்பு, அவனை தேற்றி, தையரியப்படுத்தி, ஆறுதல் அளித்தார். தேவ சித்தமானது, தேவ திட்டத்தின்படி தன்னில் நிறைவேறும்படிக்கு, சாந்தகுணமுள்ளவனான். கருப்பொருளாவது, நாம் இந்தப் படிகளை ஒருமுறை கடந்து வந்ததுடன், அது முடிவடைவ தில்லை. நாம் மறுபடியும், எப்போதெல்லாம், பேதுருவைப் போல நாம் நம்பெலத்தைக் குறித்து மேன்மைப் படுத்துகின்றோமோ, அப்போதெல்லாம் சிலுவையின் அடியில் சென்று மனமுடைந்து, மனம்திரும்பி, மறுபடியும் நம்மை ஒப்புக்ககொடுத்து பெலனடைய வேண்டும்.

**யோவான் 21:17**

பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, என் சுயத்தை குறித்து ஒருபோதும் மேன்மைபாராட்டாதபடிக்கும், என்னில் குறைகளை காணும்போது, உம் சமுகத்தில் வந்த மனந்திரும்புகின்ற இருதயத்தை எனக்கு தந்து வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

வெள்ளி | தை 17

📖 மாலை வாசகம் – 2 பேதுரு 2:6–8

# தேவ நீதியைக் குறித்த வாஞ்சை

ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்ன ப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். ஆயக்காரர், ரோமருக்கு வரிவசூலிப் பவர்களாக இருந்ததால், யூதர்கள், இவர்களை துரோகிகள் என்று கரு தினார்கள். அத்தோடு, இவர்கள் தங்களுக்கு ஆதாயம் உண்டாகத்த க்கதாக அநீதியான முறையில், ஜன ங்களிடம் வரியை வாங்குகின்றவர்க ளாவும்இருந்தார்கள். ஒரு நாள், ஆண் டவராகிய இயேசு எரிகோவில் பிர வேசித்து, அதின் வழியாக நடந்து போகையில், இயேசு எப்படிப்பட் டவரோ என்று அவரைப் பார்க்கும்படி சகேயு வகைதேடினான். அவன்குள் ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன் றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக் கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினது ண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். ஐசுவரியவானும், அநீதி செய்கின்றவனும், பாவியும், துரோகியுமாக இருந்த அவனுடைய செய்கைகள், முதலாவதாக, அவன் தன் ஆவிக் குரிய ஏழ்மையை உணர்ந்ததை வெளிக்காட்டுகின்றது. அதனால், அவன் ஆண்டவர் இயேசுவை தேடினான். தன் வாழ்வின் பரிதாபநி லை யை குறித்து, அவன் தன் மனதிலே உணர்ந்து கொண்டபடியால், மனந் திரும்புதல் அவன் வாழ்க்கையிலே உண்டானது. தேவ சித்தமானது, தேவ திட்டத்தின்படி தன்னில் நிறைவேறும்படிக்கு, தன்னை ஒப்புக் கொடுக்க ஆயத்தமுள்ளவனான். இப்பொழுது அவன் தன்னிலே தேவ நீதியானது நிறைவேற வேண்டும் என்று எண்ணமுள்ளவனான். அதன் முதற்படியாக, தன்னிடத்திலிருக்கும் அநியாயங்களெல்லாம் அகற்றப்பட வேண்டும் என்ற வாஞ்சை அவன் மனதிலே உண்டாயிற்று. அப்படி ப்பபட்ட பசிதாகம் உள்ளவர்கள், மனத்திருப்தியை பெற்றுக் கொள் கின்றார்கள்.

**மத்தேயு 5:6**

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

**ஜெபம்**: இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவை அனுப்பிய பிதாவாகிய தேவனே, என் வாழ்விலே இருக்கும் அநியாயங்களை நான் அகற்றிவிட உணர்வுள்ள இருயதத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தெய்வீக சுபாவங்களுக்கு பங்காளிகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த அதிகாரியானவன், தன்னை நியமித்த தேசத்தின் ராஜாவிற்கு விசுவாசமற்றவனும், தன் ஊராருக்கு அநியாயம் செய்கின்றவனுமாக இருந்தான். அந்த ஊரின் வருடாந்த ஒன்று கூடலின் நாளிலே, ராஜாவின் பிரதிநிதிகள் அந்த கொண்டாட்டத்திலே கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அந்த ஒன்றுகூடலிலே அந்த அதிகாரியானவன் உரையாற்றும் போது, நீதியும், நியாயமும் ஆளுகைக்கு இன்றியமையாதது என்று திட்டமாக கூறினான். அந்த ஊர் ஜனங்கள் மத்தியில், நீங்கள் ஒருவராக அந்த இடத்திலே இருந்தால், அந்த அதிகாரியைக் குறித்து என்ன கூறுவீர்கள். ஒருவன், தன் ஆவிக்குரிய வாழ்வின் பரிதாப நிலைமை உணராமல், நீதியையும் நியாயத்தையும் பற்றி பிரசங்கித்தால், அவன் மாயக்காரனாக இருக்கின்றான் என்று கூறுவீர்கள் அல்லவா? தன் குற்ற ங்களை குறித்து மனம்வருந்தாதவன், எப்படி தேவ சித்தம் தன் வாழ்வில் நிறைவேறும்படிக்கு தன்னை ஒப்புக் கொடுத்து காத்திருப்பான்? தன் சுயபெலத்தில் தங்கியிருப்பவன், சுயநம்பிக்கையில் வாழ்பவன், எப்படி தேவ நீதியைக் குறித்து வாஞ்சையுள்ளவனாக இருப்பான்? சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு விசுவாசியானவனின் வாழ்வில் இந்தப் படிகள் நிறைவேறுவதற்கு அவன் ஆண் டாண்டு காலமாக காத்திருக்க வேண்டும் அல்லது பயிற்சி எடுத்து சித்தி பெற வேண்டும. என்ற எண்ணம் தவறானது. இவைகள் ஒரு விசுவாசியானவனின் தகமைகள் அல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக இரட்சிப்பை அடைந்து, தேவ வார்த்தைக்கு கீழ்படிகின்ற சுபாவங்கள் இருக்கும். மாம்ச சிந்தையோ இதற்கு விரோதமாக செயற்படும். ஒரு விசுவாசியின் வாழ்விலே இவைகள் காணப்படாமல் இருந்தால், அவன் தன் ஆவிக்குரிய வறட்சி நிலைமைய ஆராய்ந்து உணர்ந்த வனாய் மறுபடியும் சிலுவையண்டைக்கு திரும்ப வேண்டும். தேவ பயமுள்ள விசுவாசியின் வாழ்விலே இந்தப்படிக்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். ஒரு விசுவாசியானவன், தன் வாழ்விலே, முதலாவதாக தேவ ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேட வேண்டும். அந்த நீதியைக் குறித்து பசிதாகமுள்ளவன், மறுமையிலே நித்திய திருப்தியை அடைவது மட்டுமல்ல, இந்த உலகத்திலும், அவன் எல்லா சூழ்நிலைகளிலும் கிறிஸ்துவுக்ள் திருப்தியடைகின்றவனாக இருப்பான்.

**மத்தேயு 6:33**

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

**ஜெபம்:** நீதியின் தேவனே, கர்த்தருடைய பிரசன்னமாகுதலை வாஞ்சிக்கும் யாவருக்கும் நீதியின் கீரிடத்தை கொடுப்பவரே. நான் தேவ நீதியை வாஞ்சித்து தேடுகின்றவனாக இருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சாயலால் திருப்தியாவேன்

நோவாவின் காலத்திலே மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. நோவாவுக்கோ, கர்த்தருடையகண்களில் கிருபை கிடைத்தது. அப்பொழுது கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல், மனுஷன்முதற் கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிற வைகளை நிக்கிரகம்பண்ணுவேன் நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்றார். கர்த்தருடைய பார்வையிலே நீதிமானாக இருந்த நோவாவோ, ஜனங்களின் அக்கிரமங்களை அறிந்தவனாக இருந்தும், நீதியை பிரசங்கித்தவனாக இருந்தான். ஏனெனில் தேவ நீதியைக் குறித்த பசிதாகம் அவனிடத்தில் இருந்தது. நீதியின் கிரீடத்தை பெற்றுக் கொள்ளும்படி அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருந்து, முதலாவதாக, உங்களுடைய சொந்த வாழ்விலே தேவ நீதியை நடப்பிக்க வேண்டும். அத்துடன், அநீதியை நடப்பிக்கும் சந்ததியினரின் வாழ்வைக் குறித்து, எரிச்சலடையாமல், அவர்களுக்காக பரிதபிக்கின்றவர்களாகவும், கிடைக்கும் சந்தர்ப்பங்களிலே, தேவ நீதியை குறித்தும், அநீதியாக வாழும் வாழ்க்கையின் முடிவு எப்படியாக இருக்கும் என்பதைக் குறித்தும், அதிலிருந்து எப்படி தப்பித்தக் கொள்வது எப்படி என்பதையும் போதிக்கின்றவர்களாகவும் காணப்பட வேண்டும். நோவாவின் நாட்களிலே, அக்கிரம செய்கைக்காரர்கள்ஒருவரும்மனந்திரும்ப மனதில்லமல் அழிந்து போனார்கள். அது தேவனாகிய கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. அதுபோல தேவ நீதியானது, நம்முடைய வாழ்விலும், அக்கிரம செய்கைகாரருடைய வாழ்விலும் நிச்சயமாக நிறைவேறும், தேவ நீதியைக் குறித்து பசிதாகமுடையோர், தேவனுடைய நீதியினால் திருப்தியடை வார்கள். ஆனால், தேவ பிள்ளைகளுடைய மனநிலையோ, தேவனுக்கு முன்பாக ஏற்புடையதாக இருக்க வேண்டும். தேவனுக்கு பிரியமான வர்கள். நீதியில் அவருடைய முகத்தைத் தரிசிப்பார்கள். அவர்கள் விழிக்கும்போது அவருடைய சாயலால் திருப்தியாவார்கள்.

**சங்கீதம் 17:15**

**நானோநீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.**

**ஜெபம்**: மகா வறட்சியான காலங்களில் என் ஆத்துமாவைத் திருப்தியாக்கி நடத்தும் தேவனே, நான் எப்போதும் உம்முடைய நீதி நிறைவேற வேண்டும் என்ற எண்ணமுடையவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | தை 20

📖 மாலை வாசகம் – 2 கொரி 6:14

## "நீதிமான்கள்"

சோதோம் கொமோரா என்னும் பட்டணங்கள் சாம்பலாக்க படும் முன்னதாக, நீதிமானாகிய ஆபிரகாம், அக்கிரமம் நிறைந்த அந்த பட்டணங்களுக்காக, கர்த்தரிடத்திலெ அநேக தடவைகள் பரிந்து பேசினான். முடிவிலே, அந்த அந்த பட்டணங்களின் அநீதி எவ்வளவு அகோரமாக இருக்கின்றது என்று அறிந்து கொண்டான். அந்த பட்டணங்களின் அக்கிரமம் மிகுதியினால், தேவனாகிய கர்த்தர் அதை கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். அவர்கள் மத்தியிலே லோத்து என்னும் நீதிமான் வாழ்ந்து வந்தான். அவனோ, அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையினால் வருத்தப்பட்டு. நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டான். நீதிமானாகிய லோத்தை கர்த்தர் இரட்சித்தார். *(2 பேதுரு 2:8)*. பரம யாத்திரிகளாகிய நாமும் இந்த உலகத்தை கடந்து சென்ற கொண்டிருக்கின்றோம். இந்த உலகத்திலே அநீதியானது மலிந்து கொண்டே போகின்றதை நாம் கேள்விப்படுகின்றோம். "நீதிமான் தன் நீதியைவிட்டு விலகி, அநீதிசெய்து அதிலே செத்தால், அவன் செய்த தன் அநீதியினிமித்தம் அவன் சாவான். துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். அவன் எச்சரிப்படைந்து, தான் செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை." *(எசேக்கியல் 18:26-28)* என்று தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு கூறியிருக்கின்றார். ஒருவேளை நம்மை சுற்றிலும் அக்கிரமங்கள் மலிந்து கொண்டிருக்கலாம். ஒரு விசுவாசியானவன் வாழும் இடத்தில், லோத்தைப் போலவும், நோவாவைப் போலவும், அவன் ஒருவன் மாத்திரம் மீந்திருந்தாலும், முதலாவதாக அவன் தேவ நீதியை பற்றிக் கொண்டிருக்க வேண்டும். அநீதிக்கு உடன்படாமல், தேவ நீதி நிறைவேறும்படிக்கு காத்திருக்க வேண்டும். ஒருவரும் கெட்டுப்போகலும், அநீதியிலே அழிந்து போகாதபடிக்கும் மனம்திரும்ப வேண்டும் என்று, அவர்களுக்காக ஜெபிக்கின்றவர்களாக காணப்பட வேண்டும்.

**எசேக்கியேல் 18:32**

**மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.**

**ஜெபம்**: நீதியிலே பிரியப்படுகின்ற தேவனே, நான் அநீதி செய்கின்றவர்களோடு சமரசம் செய்யாமல், தேவ நீதியின் வழியிலே நிலைத்திருக்கும்படிக்கு உம்முடைய கிருபையினால் என்னை தாங்கி வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | தை 21

📖 மாலை வாசகம் – சங்கீதம் 145:8–9

# இரக்கம் உள்ளவர்கள் யார்?

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியாவனின் வாழ்விலே வசதியிருந்தபோதும், அவன் தன்னிடமுள்ளவைகளிலே நம்பிக்கை வைக்காமலும், தன்னிடமிருக்கும் உலகப் பொருட்களினாலே தன் பிள்ளைகளுக்கு நல்வாழ்வு உண்டாகாது என்றும், ஆண்டவர் இயேசு இல்லாமல் வாழமுடியாது என்றும் மனதார உறுதியாக அறிக்கை செய்கின்றவனாகவும், அவரிலேயே தங்கி வாழ்பவனாகவும் இருந்து வந்தான். அவன் தன் வாழ்விலே சுயநீதியை நடப்பித்தேன் என்று உணர்ந்த கொள்ளும் போது, தன் குற்றங் குறைகளை குறித்து மனம்வருந்துகின்றவனாவும், தன் சொந்த அறிவின் படியோ, தனக்கிருக்கும் பெலத்தின்படியோ காரியங்களை நடப்பிக்காமல், தேவ நீதி தன் வாழ்விலே நிறைவேற வேண்டும் என்று அதைக் குறித்து வாஞ்சையுள்ளவனாகவும் இருந்தான். ஒருநாள், அந்த ஊரிலே இருந்த மனிதனொருவன், இந்த விசுவாசியின் குடும்பத்திற்கு எதிராக பெரும் குற்றத்தை செய்து, கையும் களவுமாக அகப்படுக் கொண்டான். உலக நீதியின்படியும், மனித நேயங்களின்படியும், அந்த மனிதனாவன், தண்டனைக்கு பாத்திரனாக இருந்தான். அந்த தண்டனையை அந்த மனிதனுக்கு வழங்குவதற்கு, அந்த விசுவாசியானவனுக்கு சகல அதிகாரமும், பெலமும் அவனிடம் இருந்தது. அந்தத் தண்டனையை அவனுக்கு வழங்கினாலும், அந்த ஊரின் மக்களும், சக விசுவாசிகளும், அவனுடைய உற்றார் உறவினர் நண்பர்கள் யாருவரும் அதை நீதி என்றே கூறிக் கொள்வார்கள். ஆனால், தேவ நீதி தன் வாழ்விலே நிறைவேற வேண்டும் என்ற வாஞ்சையுடைய அந்த விசுவாசியானவன், தேவனுடைய பாதத்திலே இருந்து ஜெபித்தான். தான் செய்யப் போவதைக் குறித்த பாரம் அவன் மனதிலே உண்டாயிற்று. தன் வாழ்விலே, தனக்கு வரவேண்டியிருந்த நித்திய ஆக்கினையை கர்த்தர் அகற்றிவிட்டார் என்ற உணர்வு அவன் மனதிலே பெருகிற்று. மறுநாள் காலையிலே, நியாயம் செய்யவதற்காக ஊரின் மூப்பர்கள் கூடி, அந்த மனிதனுக்கு வரவேண்டிய கடும் தண்டனையை அறிவித்தார்கள். அந்த வேளையிலே, அந்த விசுவாசியானவன் எழுந்து நின்று, அவனுக்கு வரவேண்டிய தண்டனை அகற்றிவிட வேண்டும் என்றும், தான் அவன் செய்ய குற்றத்தை மன்னித்து விடுகின்றேன் என்றும் மூப்பர்களுக்கு அறிவித்தான். அந்த விசுவாசியாவன் இரகமுள்ளவனாக இருந்தான். நீங்கள் மற்றவர்கள் வாழ்விலே இரக்கத்தை காண்பிக்கின்றீர்களா?

**மத்தேயு 5:7**

**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, நான் பாத்திரனாக இருந்த என் தண்டனையை நீர் அகற்றிப்போட்டததை உணர்தவனாக, நானும் இரக்கமுள்ளவனாக இருக்க உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நம்மேல் வெளிப்பட்ட தேவ இரக்கம்

தேவ இரக்கமானது, நாம் பெற்றுக் கொள்ள பாத்திரராக இருந்த நித்திய தண்டனையை, நாம் பெற்றுக் கொள்ளாதபடிக்கு நம்மைவிட்டு அகற்றிப் போட்டது. "முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்." (எபேசியர் 2:2) "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்." (தீத்து 3:3) நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். அதாவது, நம்முடைய பிறப்பினாலும், நடக்கையினாலும், கிறஸ்துவை அறிய முன்னதாக, 'கீழ்படியாமையின் பிள்ளைகள்' 'கோபாக்கினையின் பிள்ளைகள்' என்ற பெயர்களுக்கு ஏற்படி வாழ்ந்து வந்தோம். நாம் எதற்கு பாத்திரராக இருந்தோமோ, அதை நாம் பெற்றுக் கொள்ளாதபடிக்கு, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மைஇரட்சித்தார். அதுமட்டுமல்லாமல், தம்முடைய கிருபையினாலே, நாம் பெற்றுக் கொள்ள பாத்திராக இல்லாதிருந்த 'நீதிமான்' 'பரம பிதாவின் பிள்ளைகள்' என்ற மகத்துவமுள்ள பதவியை எங்களுக்கு கொடுத்தார். இந்த மன்னிப்பு எதினால் உண்டானாது? இந்த மாபெரும்தகுதியை பெற்றுக் கொள்வதற்குரிய நிபந்தனை என்ன? தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவசிப்பதினாலே மட்டுமே இந்த பதவி நமக்கு கிடைத்தது. எனவே, பிதாவாகிய தேவன் தாமே, இத்தனை இரகத்தை இலவசமாக நம்மேல் பாராட்டியிருக்க, நாம் நமக்கு எதிராக குற்றம் செய்தவர்களுக்கு என்ன செய் வது, தேவ நீதியாக இருக்கும்? தேவனுடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, அவருடைய திட்டம் தன்மேல் நிறைவேற காத்திருக்கின்றவன் என்ன செய்வான்? அவனும் இரக்கம் காண்பிப்பான் அல்லவா?

**தீத்து 3:5**

தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

**ஜெபம்:** தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல எனக்கு இரங்கின தேவனே, இரக்கத்தை காண்பிக்கும் தெய்வீக சுபாபமானது என்னில் வளரத்தக்கதாக மன்னிக்கும் இருதயத்தை உண்டு பண்ணுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உன்னதமானவருடைய பிள்ளைகள்

தேவனாகிய கர்த்தர்தாமே, நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் நம்மேல் தம்முடைய இரக்கத்தை பொழிந்தார். அந்த இரக்கத்தை நம்மேல் மட்டும் பொழிந்தாரா? "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." (யோவான் 1:12). அதாவது, இந்த இரகத்தினால் உண்டாகும் நன்மையை பெற்றுக் கொள்ளுதற்கு, ஆண்டவராகிய இயேசு தாமே ஒரே ஒரு வழியாக இருக்கின்றார். அவரை விசுவாசிப்பதினாலே பெற வேண்டிய ஆக்கினையை பெற்றுக் கொள்ளாமல், பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்களாக இருந்த பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகள் என்ற சிலாக்கியத்தை பெற்றுக் கொண்டோம். அப்படியானால், ஏன் இந்த சிலாக்கியத்தை உணராதவர்களாக இருக்கின்றார்கள்? "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது." இவர்கள் ஆவியிலே எளிமையற்றவர்கள், அதாவது தங்கள் ஆவிக்குரிய வறுமையை உணராமல் வாழ்கின்றவர்கள். தங்கள் பாவங்களுக்காக துயரப்படாதபடிக்கு மனக்கடினமுள்ளவர்களானார்கள். சத்திய வழியை காண்பிக்கும் தீபத்தை கண்டும், நாம் முற்காலத்திலே வாழ்ந்த வாழ்க்கையை இவர்கள் வாஞ்சித்து நாடுவதால், தங்கள் சொந்த பெலத்திலே வாழ்ந்து விடுவோம் என்ற அகந்தையுள்ளவர்களாக இருக்கின்றார்கள். சுயநீதியே இவர்களுடைய நீதி. இப்படிப்பட்டவர்களை காணும்போது, முதலாவதாக, தேவன் நம் மனக்கண்களை திறந்து விட்டபடியினாலே, அவருக்கு நன்றியை தெரிவிக்க வேண்டும். அவர்களை கண்டு எரிச்சலடையாமல், அவர்களுக்காக பரிதவிக்கின்றவர்களாக காணப்பட வேண்டும். அவர்களுடைய மனக்கண்களின் குருட்டாட்டம் நீங்கிவிடும்படிக்கு, அவர்களுக்காக வேண்டுதல் செய்கின்றவர்களாக காணப்பட வேண்டும். நாம் பெற்ற இந்த பெரிதான தேவ நன்மையை, அவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற இரக்கமுள்ள மனநிலையுடையவர்களாக காணப்படவேண்டும். அப்பொழுது உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மைசெய்கிறாரே.

**லூக்கா 6:36**

**ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.**

**ஜெபம்:** பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்ற தேவனே, நான் எப்போதும், உம்முடைய சமுகத்திலே மனத்தாழ்மையோடு இருக்கும்படிக்கு, பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# எத்தனை முறை மன்னிப்பது?

நம்முடைய ஆண்டவராகிய இயேசு தாமே, இரக்கம் என்றால் என்ன என்று தம்முடைய சீஷர்களுக்கு உவமைகள் வாயிலாக கற்றுக் கொடுத்தார். அது மாத்திரமல்ல, அவர் கற்றுக் கொடுத்தவைகளை சம்பூரணமாக தம்முடைய வாழ்க்கையிலே நிறைவேற்றி முடித்து, என்றென்றுமாய் இரகத்தில் ஐசுவரியமுள்ளவராகவே இருக்கின்றார். ஒரு சமயம், அவருடைய பிரதான சீஷனாகிய பேதுரு ஆண்டவர் இயேசு இடத்திலே வந்து, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும். ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். இந்த சம்பவதிலே, பேதுரு கூறியதை சற்றுகவனித்துப் பாருங்கள். எனக்குவிரோதமாக குற்றம் செய்திருந்தால் என்று கூறாமல், எனக்கு விரோதமாக குற்றஞ் "செய்து வந்தால்" என்று தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது என்று சுட்டிக் காட்டினான். அதற்கு ஆண்டவர் மறுமொழியாக: ஏழுதரமாத்திரமல்ல, எழெழுபதுதரமட்டும் என்று உனக்கு சொல்கின்றேன் என்றார். கருப்பொருளாவது, நீ மன்னிப்பு வழங்குவதைக் குறித்து கணக்கு வைத்திருக்க வேண்டாம். நீ பெற்றுக் கொண்ட மகா பெரிய அளவிடமுடியாத இரக்கத்தில் கொஞ்சத்தை உன் சகோதரனுக்கு காண்பி என்று கூறினார். இன்று சிலர், குற்றம் செய்தவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பலவந்தம் செய்து கொள்வார்கள் அல்லது தங்களுடன் நெருங்கி பழகின்றவர்களுக்கு மற்றவர்கள் மன்னிப்பை வழங்க வேண்டும் என்று அவர்களுக்காக வாதாடுவார்கள். ஆனால், முதலாவதாக, ஒரு விசுவாசியானவன், தன்னுடைய வாழ்க்கையை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். தன்னுடைய குற்றங்களுக்காக மனம் வருந்துகின்றவனாகவும், மனப்பூர்வமாக குற்றம் செய்தவர்களை மன்னிக்கின்றவனாகவும் காணப்பட வேண்டும். இவற்றை எழுதுவதும், பிரசங்கிப்பதும் இழகுவானது, ஆனால் முகஸ்தூதி இல்லாமல் அதை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமான உபதேசம். மனித பெலத்தால் ஆகாததை, செய்து முடிப்பதற்கு தேவ ஆவியானவர் துணையாக இருக்கின்றார். எனவே, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தைகள் நிறைவேற இடங் கொடுங்கள். இரக்கத்தை பெற்றுக் கொண்ட நீங்கள் அதை மற்றவர்களுக்கும் காண்பியுங்கள். மன்னிப்பை வழங்குங்கள்.

**மத்தேயு 18:21**

ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, என் வாழ்விலே, என் பெலத்தாலால் செலுத்தக் கூடாததாயிருந்த பாவ கடனை நீர் செலுத்தி தீர்த்தீர். நானும் உம்மைப்போலமாற எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இரக்கமற்ற ஊழியன்

**மத்தேயு 18:35**

**நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்.**

எனக்கு எதிராக குற்றம் செய்தவனுக்கு இரக்கமல்ல, தண்டனையே கிடைக்க வேண்டும் என்பது மனிதர்களின் பொதுவான எண்ணம். ஆனால், ஆண்டவர் இயேசுவோ, கணக்கு பார்க்காமல் மன்னிக்கும்படி ஏன் கூறினார்? ஒருவன் பல தலைமுறைகள் வாழ்ந்தாலும், செலுத்தி தீர்க்கமுடியாத அளவிற்கு, தன் எஜமானனாகிய ராஜாவினிடத்தில் கடன் பட்டிருந்தான். கடனை செலுத்தும் நாள் வந்த போது, கடனை செலுத்தி தீர்ப்பதற்கு அவனிடத்தில் ஒன்றும் இல்லாதிருந்தது. அப்பொழு ராஜா அவனை நோக்கி: உனக்குண்டான எல்லாவற்றையும், உன் மனைவி பிள்ளைகளையும் விற்று கடனை தீர்த்து கொள் என்று கட்டளையிட்டார். அவனோ ராஜாவின் சமுகத்திலே தாழ விழுந்து, தனக்கு இரங்கும்படி கேட்டுக் கொண்டான். மனதுருக் கிய ராஜா, தண்டனையோ, தவணையோ ஏதுமில்லாமல், அவனுடைய கடனை அவனுக்கு மன்னித்து விட்டார். பெரு குற்றத்திலிருந்து மன்னிப்பை பெற்ற அந்த ஊழியக்காரன், புறப்பட்டு போகையில், தன்னிடம் சிறிய கடன்பட்ட தன்னுடைய வேலைக்காரனொருவனை சந்தித்தான். அவனைப்பிடித்து, தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை தீர்க்க வேண்டும் என்றான். அந்த வேலைக்காரம் அவன் காலிலே விழுந்து, கால அவகாசம் தரும்படி இரக்கத்திற்காக வேண்டிக் கொண்டான். அவனோ, அதைக் கேளாமல், அவனை காவலிலே வைத்தான். இந்த சம்பவத்தை கேட்ட ராஜா, அந்த இரக்கமற்ற மனதுள்ள, பொல்லாத ஊழியனை பிடித்து, அவன் கடனை அவன் தீர்த்து முடிக்குமட்டும் உபாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக் கொடுத்தான். பல தலைமுறைகள் வாழ்ந்தாலும் கொடுக்க முடியாத கடனை அவன் காவலிலே இருந்து எப்படி செலுத்த முடியும்? ராஜாவின் கோபத்திற்கு யார் எதிர்த்து நிற்க கூடும். எனவே, நித்திய நரக ஆக்கினைக்கு பாத்திரராராக இருந்த நம்முடைய பாவங்களை நமக்கு அவர் மன்னித்திருக்க, நாம் மற்றவர்களுடைய குற்றங்களுக்கு தண்டனையை வழங்கினால், நம்முடைய நீதியுள்ள தேவன் என்ன செய்வார்? எனவே, மனதுருகுங்கள், மனம் இரங்குங்கள். ஒருதர மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும், நம்முடைய பெலவீனங்களை கண்டு, தேவன் நம்மை தண்டிக்காமல், தம்முடைய இரக்கத்தை காண்பிக்கின்றார். அதுபோல, நாமும் நம்முடைய இரக்கத்தை மற்றவர்களுக்கு காண்பிப்போமாக.

**ஜெபம்**: என்னுடைய மீறுதலுக்கு தக்கதாய் எனக்கு தண்டனை வழங்காதிருக்கும் தேவனே, நான் அனுதினமும் உம்மிடமிருந்து பெறும் இரக்கத்தை மற்றவர்களுக்கு காண்பிக்கும் நன்றியுள்ள இருதயத்தை எனக்கு தந்தவழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் வைத்திருக்கும் அளவுகோல்

ஒரு குடும்பத்திலே இருந்த மூத்த குமாரனானவன், தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி, தன் தந்தையை இரந்து கேட்டு, மன்னிப்பை பெற்றுக் கொண்டான். சில மாதங்களுக்க பின், அவனுடைய தம்பி யானவன், வேறறொரு குற்றத்திலே அகப்பட்டான். தன் தமையனைப் போல அவனும் மனம் வருந்தினான். தன்னை மன்னித்துவிடும்படி, தன் தந் தையைவருந்திக்கேட்டான். ஆனால், தமையனானவவோ, தன் தந்தையா னவர், தன் தம்பிக்கு அவன் குற்ற த்தை மன்னிக்க முன்னதாக, அவனு க்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். அவனுக்குரிய தண்டனையை வழ ங்க வேண்டும் என்று மனக்கடின மு ள்ளவனாக இருந்தான். அந்த தமை யனைப் போல கடின மனதுள்ளவ ர்களை எப்படி சொல்வது? அவன், தனக்கொரு ஒரு நீதியும், தன் தம்பிக்கு இன்னுமொரு நீதியையும் வைத்திருந்தான். இப்படிப்பட்டவர் களினடம் தேவ நீதி நிறைவேற வேண்டும் என்ற எண்ணமில்லை. இவர்கள் இருதயம் கடிப்பட்டிருப்பதால், இப்படிப்பட்டவர்களுக்குள், தங்கள் நிலைமையை குறித்த பெருமை ஆளுகை செய்யத் ஆரம்பித்து விடுகின்றது. இவர்களின் உள்ளத்திலே, தேவ சித்தம் நிறைவேற வேண்டும் என்னும் மனதில்லாமல், தேவ சித்தமானது தங்கள் விருப் பப்படி நிறைவேற வேண்டும் என்ற மனதுள்ளவர்ளாக காணப்படு வார்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன் புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாண த்தை இவர்கள் நிறைவேற்றுவதில்லை. தங்களுக்கு ஒரு அளவுகோ லும், மற்றவர்களுக்கு இன்னுமொரு அளவுகோலையும் வைத்திருப்ப தால், பட்சபாதமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். பிரிமானவர்களே, தேவ னுடைய இரக்கத்தை அசட்டை செய்யாதிருங்கள். ஒருவனுக்கு உங்கள் இரக்கத்தை காண்பிக்க தகுந்த சந்தர்ப்பம் ஏற்படும்போது, உங்கள் இரு தயமானது, தீமைக்கு தீமையை நடப்பிக்க வேண்டும் என்று கடி னமுள்ளதாக இருந்தால், சிலுவையண்டைக்கு திரும்புங்கள். உங்கள் ஆவிக்குரிய பரிதாப நிலைமையை உணர்ந்தவர்களாக, மனதிலே மறை ந்திருக்கும் அருவருப்புக்களை தேவனிடம் அறிக்கையிடு ங்கள். அவர் மன்னிக்க தயை பெருத்தவராக இருக்கின்றார். எந்த அளவுகோலால் மற்றவர்களை நீங்கள் அளக்கின்றீர்களோ, அந்த அளவுகோலால் உங்களுக்கும் அளக்கப்படும்.

**யாக்கோபு 2:13**

ஏனென்றால், இரக்கஞ்செய் யாதவனுக்கு இரக்கமில் லாத நியாயத்தீர்ப்புக் கிடை க்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன் மைபாராட்டும்.

**ஜெபம்:** மனதுருக்கமுள்ள தேவனே, நான் உம்மிடம் பெற்றுக் கொண்டிருக்க இரக்கத்தை அசட்டை செய்யாமல், மற்றவர்களும் அதே இரக்கதை பெற வேண்டும் என்ற உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து...

தன் தகப்பனாவரின் பண்ணையிலே வேலை பார்த்து வந்த இளவயதிலுள்ள குமாரனானவன், பண்ணையிலே அவனுக்கு கொடுக்கப்பட்ட வேலையொன்றை குறித்த நேரத்திலே செய்யாமல் போனதினாலே, மந்தையிலே சில ஆடுகள் வருதமுற்றது. பண்ணையின் ஊழியர்கள், ஆடுகளின் நிலைமையை பண்ணையின் எஜமானிடத்திலே அறிவித்தார்கள். எஜமானானவன் விரைந்து சென்று காரியத்தை விசாரித்தார். பண்ணையிலிருந்த ஊழியர்கள்மேல் அவர் கோபமநை்தார். அந்த வேளையிலே அங்கு வந்த குமாரனானவன், பண்ணையின் ஊழியரின் முன்னிலையிலே, எஜமானானகிய தன் தகப்பனானவரிடம், நடந்த சம்பவத்தில் எதையும் ஒழித்து மறைக்காமல், உள்ளத்தில் உள்ளபடி கூறினான். தனக்கும் தன் தகப்பனானவரின் உறவுக்கும் இடையிலே எந்த சிறிதான காரியமும் நிற்கக்கூடாது என்ற எண்ணமுடையவனாக இருந்த அந்த குமாரனானவன், தனக்கிருந்த குமாரனுக்குரிய உரிமையையும சலுகைகளையும் நன்கு அறிந்திருந்தும், ஊழியர்கள் முன்னிலையிலும் கபடாய் நடந்து கொள்ளாமல், உண்மையை கூறினான். அநேக ஆண்டுகளாக, அந்த எஜமானனாவனுக்கு ஊழியம் செய்து வந்த மூத்த ஊழியர்களும், அந்த குமாரனுடைய மாசில்வாத இருதயத்தை கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், அவன் தன் தகப்பனானவனை நோக்கி: நான் இனிமேல் இப்படியான குற்றங்களை செய்ய மாட்டேன் என்று உறுதியாய் கூறிக் கொண்டான். தன்னுடைய குமாரனானவன், வாலிபனாக இருக்கின்றான். இது அவனுடைய முதலாவது குற்றம் என்றும், அதனால், இது கடைசியான குற்றமுமாக இருக்காது என்று அறிந்திருந்தார். ஆனாலும், அவன் தன் இருதயத்திலே சுத்தமுள்ளவனாக இருப்பதை கண்டு மனதிலே தன் குமாரனைக் குறித்து பெருமிதமடைந்தார். பிரியமான சகோதர சகோதரிகளிலே, நாம் இருதயத்திலே சுத்தமாக இருப்பது என்பது முற்றிலும் பாவமில்லாத, சம்பூரண பரிசுத்த வாழ்வு என்பது பொருளல்ல. ஒரு விசுவாசியாவன், இந்த உலகத்திலே வாழும்வரை அவனிடத்திலே குறைகள் உண்டாகக் கூடிய சாத்தியம் உண்டு. அதே நேரத்திலே, அவன் தனக்கும் தன் தேவானாகிய கர்த்தருக்கும் இடையிலே எதுவும் குறுக்கிடால், தன் இருதயத்திலே சுத்தமுள்ளவனாகவும், மற்றவர்கள் முன்னிலையிலே நேர்மையாய் நடந்து கொள்கின்றவனாகவும் வாழ முடிவும்.

**சங்கீதம் 24:5**

**அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்.**

**ஜெபம்**: சுத்த இருதயத்தை விரும்பும் தேவனே, என் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனை தரிசிப்பவர்கள்

ஒரு ஊரிலே திருமணமாகிய இளம் தம்பதிகள், ஒருவரை ஒருவர் நேசித்து, விட்டுக் கொடுத்து, கணவன் மனைவியாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்றபோது, சில நேரங்களிலே, ஒரு சில காரியங்களிலே கருத்து முரண்பாடுகள் அவ்வவ்போது ஏற்பட்டது. அந்த வேளைகளிலே, அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அறியும் அறிவிலே வளர்ந்து வரும்படிக்கு தங்களைமாற்றிக் கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆனால், தங்கள் விவாகத்தை குறித்து எந்த சந்தேகமோ, மாற்றுக் கருத்தோ அவர்கள் மனதிலே எழுந்ததில்லை. கடந்து வந்ததோ பாதி வழி, இன்னும் அநேக ஆண்டுகள் ஒன்றாக வாழ வேண்டும். இந்த உலகிலே, அவர்கள் பல சவால்களை எதிர் நோக்க வேண்டியிருக்கலாம். ஆனால், அவர்கள் மத்தியிலே கணவன் மனைவி என்ற உறவிலே சுத்தம் இருந்தது. அந்த உறவிலே மாயை இருந்ததில்லை. ஒழிவு மறைவாக வாழ்க்கை அவர்கள் மத்தியிலே இல்லை. கிறிஸ்து இயேசுவின் மணவாட்டியாக அழைக்கப்பட்ட சகோதர சகோதரிகளே, தேவ ஊழியராகிய பவுல் தாமே, நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன் என்று கொரிந்து சபையிருள்ளவர்களுக்கு கூறியிருக்கின்றார். அதாவாது, ஒரு விசுவாசியினுடைய ஆவிக்குரிய வாழ்கையிலே அந்த விசுவாசிக்கும் தேவனாகிய கர்த்தருக்கும் இடையிலே ஒரு மூன்றாம் நபர் அல்லது பொருள் வரும் போது, அந்த உறவு மாசுபட்டு போய்விடுகின்றது. விபச்சாரத்திற்கு ஒத்த விக்கிரக ஆராதனை அந்த உறவிலே உண்டாகின்றது. அந்த விவாசியின் வாழ்விலே, விசுவாசி என்னும் சொல் அர்தமற்றதாக மாறிப்போய் விடுகின்றது. கற்புள்ள மணவாட்டி என்ற பதம் மாசுபட்டு போய்விடுகின்றது. முழு இருதயத்தோடு தேவனை சேவிக்க முடியாது. அந்த இருதயத்திலே சுத்தம் இல்லை. எனவே மாயை உங்களை விட்டு அகற்றுங்கள். சத்தியத்திலே நிலைத்திருங்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்பட்டு சுத்தமாக்கப்படுவதுபோல, நம்முடைய விசுவாசம் சோதிக்கப்பட்டு நம் சிந்தையும் இருதயமும் சுத்தமாக்கப்படும். இருதயத்திலே சுத்தமுள்ளவர்கள், தற்போது தங்கள் விசுவாச கண்களிககாலே தேவனை தரிசிக்கின்றார்கள். அவர் வெளிப்படும் போது, நாமும் மறுரூமடைந்து என்றென்றும் அவரை முகமுகமாக தரிசிப்பார்கள்.

**மத்தேயு 5:8**

**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.**

**ஜெபம்:** பரலோக தேவனே, எனக்கும் உமக்கும் இடையிலே எந்த ஒரு விக்கிரகமும் வந்து மாயம் பண்ணாதபடிக்கு, உமக்கு முன்பாக எப்போதும் உத்தமனாய் நடந்து, மனதார சத்தியத்தை பேச கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கலப்பில்லாத வாழ்க்கை

ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரியானவள், தன் நாயகனுக்கு துரோகம் செய்யும் போது, அந்த விவாக மஞ்சம் அசுத்தமுள்ளதாக இருக்கும். அவள் தன்னை மோக பாவத்திற்கு ஒப்புக் கொடுக்கும் இரு தயமுள்ளவளாக மாறிவிடுகின்றாள். இவ்வண்ணமாகவே, தேவனாகிய கர்த்தரை தங்கள் தெய்வமாக கொண்ட ஜனங்கள், அவருக்கு துரோகம் செய்து, வேறு தேவர்கள் என்று அழைக்கப்படும் மாயைக்கு தங் களை ஒப்புக் கொடுக்கும் போது, அவர்கள் தங்கள் பரிசுத்த உற வை வேசித்தனத்துக்குள்ளாக்கி கொள்கின்றார்கள். உண்மையு ள்ள நகரம் எப்படி வேசியாய் போயிற்று! அது நியாயத்தால் நிறைந்திருந்தது, நீதி அதில் குடி கொண்டிருந்தது: இப்பொழுதோ அதின் குடிகள் கொலைபாதகர் (ஏசாயா 1:21) என்று தேவனாகிய கர்த்தர்தாமே தம்முடைய ஜனங்க ளுடைய பின்மாற்றமான இருதயத்தைக் குறித்து கூறியிருக்கின்றார். வெள்ளி தன் நிலையிருந்து களிம்பாக மாறிப் போகும் போது, அது இனி வெள்ளி என்று அழைகப்படுவதில்லை. அதுபோலவே, சுத்திகரி கப்பட்ட நிலையிலிருந்து விலகிப்போகும் விசுவாசியும், தள்ளுபடியாக வெள்ளியை போல ஆகிவிடுவார்கள் (எரேமியா 6:30). சுவையான திராட்சை இரசத்திலே தண்ணீரை கலந்துவிட்டால், அது இனி திராட்சை இரசம் என்று அழைக்கப்படாமல் தண்ணீர்கலப்பானது என்று அழைக்க ப்படும். தங்களை அழைத்த நாயகனாகிய கர்த்தருக்கு துரோகம் செய்கி ன்றவர்கள், தங்கள் இருதயத்தை திருக்குள்ளதாக மாற்றிவிடு கின்றார்கள். “நீங்கள் விரும்பின கர்வாலிமரங்களினிமித்தம் வெட்கப்படு வீர்கள் நீங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளினிமித்தம் நாணமடை வீர்கள்.” என்று கர்த்தர் கூறியிருக்கின்றார். இவர்கள் ஆதி அன்பிற்கு திரும்ப வேண்டும். எங்கே விழுந்தார்கள் என்று அறிந்து கொண்டு, தங் கள் ஆவிக்குரிய பரிதாபமான ஏழ்மையான நிலைமைய உணர்ந்து, தங் கள் துரோகளுக்காக துயரப்பட வேண்டும். தேவ சித்தமானது, தேவ னுடைய திட்டப்படி தங்கள் வாழ்விலே நிறைவேற இடங் கொடுத்து, சுய நீதியை களைந்து விட்டு, தேவனுடைய நீதி நிறைவேற வாஞ்சிக்க வேண் டும். தங்கள் இருதயங்களை மற்றவர்களுடைய குறைவிலே கடினப்ப டுத்தாமல், மாயமற்ற இரக்கத்ரதை மற்றவர்களுக்கு காண்பிக்க வேண் டும். தேவனோடுள்ள உறவிலே சுத்தமுள்ளவர்களாக மாற வேண்டும்.

**ஏசாயா 1:25**

**நான் என் கையை உன்னி டமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெ ல்லாம் நீக்குவேன்.**

**ஜெபம்**: நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மை யைப் புசிப்பீர்கள் என்று கூறிய தேவனே, நான் எப்போதும் என் உண்மை நிலையை உணர்ந்து உம்மிடமாய் திரும்பும் இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சுத்த இருதயம்

ஈசாயின் குமானாகிய தாவீது என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன் என்று தேவனாகிய கர்த்தர் தாமே தாவீதைக் குறித்து சாட்சி கொடுத்தார் (1 சாமு 13:14, அப் 13:22). தாவீது. சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக இருந்த போதும், அவன் தன் இருதயத்திலே தன் ஆவிக்குரிய ஏழ்மை நிலையை உணர்ந்தவனாக இருந்தான். தேவனுடைய சமுத்திற்கு செல்லும் போது, தன்னை ஒரு பொருட்டு என்று எண்ணாமல், தன்னைத் தாழ்த்தி, தன்னிடத்தில் நன்மை ஏதும் இல்லை என்று தன்னை முற்றிலுமாய் அவருடைய பாதத்திலே அர்ப்பணிக்கும் மனதுடையவனாக இருந்து வந்தான். ஒரு சமயம், அவன் மகா பெரும் பாதகத்தை, தேவனுக்கு விரோதமாகவும், தன் சக ஊழியனுக்கு விரோதமாவும் செய்து. அந்த தவறை மறைப்பதற்கு, சூழ்ச்சி செய்தான். அவை ஒன்றும் வாய்க்காமல் போயிற்று. அந்நாட்களிலே, தன் குற்றத்தை மூடி மறைக்கும்படிக்கு அவன் இருதயத்திலே வஞ்சனையான எண்ணங்களுக்கு இடம் கொடுத்திருந்தான். அந்த வேளையிலே, தேவனாகிய கர்த்தருடைய தீர்க்கதரியானவன், தாவீது செய்த மகா பெரிய பாதகத்தை வெளிப்படுத்தினான். அந்த கணப்பொழுதிலே, தாவீது தன் பரிதாபமாக நிலைமைய உணர்ந்து கொண்டான். தேவனுடைய சமுகத்திலே தன்னைத் தாழ்த்தி, தன் குற்றங்களுக்காக மிகவும் துயரப்பட்டான். அவன் ராஜாவாகிய சவுலினால் துன்படுத்தப்படும் நாட்களிலே, தன் புயபெலத்தை காண்பிக்காமலும், முகஸ்துதி செய்யாமலும், மற்றவர்கள் மேல் இரக்கத்தை காண்பித்து தேவ நீதி நிறைவேறும்படி நீடிய பொறுமையுள்ளவான இருந்ததினாலே, அவனுடைய சுபாவங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். அவன் தன் பாவத்தை உணர்ந்து, உள்ளத்தில் உண்மையை விரும்பும் தேவனைநோக்கி: தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும் என்று வேண்டுதல் செய்தான். அவன் தேவ இரக்கத்தைப் பெற்றான். அவனுடைய சந்ததியிலே பூமியை அரசாளும் ராஜாதி ராஜா பிறந்தார். எனவே, நம்முடைய வாழ்விலே இருதயத்திலே வஞ்சனை உண்டு என்று அறியும் போது, வேதனை உண்டாக்கும் வழிகளைவிட்டு திரும்பி, நாம் தேவனுடைய பாதத்திலே நம்மை தாழ்த்த வேண்டும்.

**சங்கீதம் 51:10**

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.**

**ஜெபம்:** உள்ளத்தில் உண்மையிருக்க விரும்பும் தேவனே, எந்த வஞ்சனையான செயல்களும், என் இருதயத்திலே குடி கொள்ள நான் இடங் கொடுக்காமல் இருக்க எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இருதயத்தைக் காத்துக் கொள்

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்.**

"எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ள துமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்க ளுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய் கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிரு க்கிறேன்." (எரேமியா *17:9-10)* என்று தேவனாகிய கர்த் தர் கூறியிருக்கின்றார். மேலும், கர் த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்க ளிலே, தம்மை பின்பற்றி வந்த சீஷர்களை நோக்கி: எப்படியெ னில், இருதயத்திலிருந்து பொல் லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய் ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும். அவைகளே மனுஷனை தீட்டுப்படுத்தும் என்று கூறியிருக்கின்றார். எனவே நாம் இந்த வார்த்தை களைக் குறித்து விழிப்புணர்வுள்ளவர்களாக வாழ வேண்டும். நாமோ, கர்த்தருடைய சமுகத்திற்கு செல்லும் போது, நம்முடைய கிரியைகளை யும், செயல்களையும், சாதனைகளையும் விபரித்து, நம்முடைய இருதயத்தை ஒருபோதும் கடினப்படுத்தாத படிக்கு, அவருடைய சமுகத்திலே நம்மை தாழ்த்தகின்றவர்களாக காணப்பட வேண்டும். தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் என்று தாவீது ராஜாவைப் போல நாமும் மனதார அறிக்கை செய்ய வேண்டும். கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கை, உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படும் வாழ்க்கை. மறுரூபமாக்கப்படும் வாழ்க்கை. ஒன்றான மெய்த் தேவனாகிய பிதாவையும், அவருடைய திருக் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிக்கின்ற அறிவிலே வளர்ந்து பெருகும் வாழ்க்கை. எனவே, நித்திய ஜீவனைக் கொடுக்கும் ஜீவ வார்த்தை களால் நாம் நம்முடைய வாழ்க்கையை காத்துக் கொள்ள வேண்டும். அவைகளே, நமக்கு எல்லையை காண்பிக்கின்றது. அவைகளே நம்முடைய காவல். தேவ வார்த்தைக்குள் வாழ்வதே நம்முடைய அரணான பட்டணம். நம்முடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே எங்கள் இருதயமும் இருக்கும். எனவே, எங்கள் இருதயமானது வாழ்வு தரும் வார்த்தையை பற்றியிருப்பதாக. அப்போது, அங்கிருந்து ஜீவ ஊற்றானது புறப்பட்டு வரும்.

**ஜெபம்:** என் உள்ளந்தரியங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவனே, என் வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானங்களும், உமது சமுகத் திலே ஏற்புடையதாக இருப்பதாக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக் கிறேன் ஆமென்.